**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.241/2018** வா.சா.2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | திருஞானம் | **வயது** | : | 59 |
| **த.பெ** | : | பாலகிருஷ்ணன் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | கொம்மனந்தல் | **தொழில்** | : | விவசாயம் |

**18.08.2025 – வா.சா. 2 முதல் விசாரணை (சாட்சி அழைப்பாணை மூலம் அழைத்து சாட்சியம் அளிக்கிறார்)**

எனக்கு வாதிகள் பழனி, மற்றும் ஆறுமுகத்தை 40 வருடங்களாக எனக்கு தெரியும். நானும், பழனியும் ஒன்றாக பள்ளியில் படித்தோம். மேலும் அவர் வீட்டிற்கு எதிரில் தான் அரசுப்பள்ளி இருந்தது. ஆகையால் எனக்கு பழனியை நன்றாகத்தெரியும். வாதிகளின் வீடு வசிப்பிடம் எங்குள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். பிள்ளையார் கோவில் தெரு, சாணார் பாளையம் கிராமத்தில் வசிக்கிறார். மேற்கண்ட வீட்டில்தான் வாதிகள் சுமார் 40 வருடங்களாக வசிதது வருகிறார்கள்.

**வா.சா.2 குறுக்கு விசாரணை**

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் சோழவரம் கிராமம் என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீகம் சோழவரம். நான் பிறந்து வளர்ந்தது படித்தது எல்லாம் கொம்மனந்தல் கிராமத்தில் தான். வழக்கு சொத்தின் விவரங்கள் சா்வே நெம்பர் விஸ்தீருணம் ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் கண்ணன் அவர்கள் பழனி மற்றும் ஆறுமுகம் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பழனி மற்றும் ஆறுமுகம் அவர்கள் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண், மற்றும் கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனி, ஆறுமுகம் மற்றும் கண்ணன் இடையில் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனி மற்றும் ஆறுமுகம் அவர்களுக்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் தேவையற்ற சாட்சி என்றும் இந்த வழக்கில் காலதாமதம் செய்யவேண்டி என்னை சாட்சியாக அழைத்துள்ளார்கள் என்றாலும், மேலும் என் சாட்சியை ஏற்றுகொள்ளகூடாது என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur